தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்ட நிலவரம்



முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 132.80 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 770 கனஅடி நீர் வந்துகொண்டிருக்கும் நிலையில், அணையில் இருந்து வினாடிக்கு 555 கன அடி நீர் பாசனத்துக்காக திறக்கப்பட்டுள்ளது. அணையில் தற்போதைய நீர் இருப்பு 5,352 மில்லியன் கன அடியாகும்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் 102 அடியானது

சேலம் மாவட்டத்தில் அமைந்துள்ள மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக் கிழமை காலை நிலவரப்படி 102.2 அடியாக உள்ளது. அணைக்கு காவிரியில் இருந்து வினாடிக்கு 17,476 கன அடி நீர் வந்து கொண்டிருக்கும் நிலையில், அணையில் இருந்து வினாடிக்கு 20,900 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

## குறைந்து வரும் வைகை அணை நீர் மட்டம்

வைகை அணைக்கு நீர்வரத்து குறைந்தும், பாசனத்துக்கும் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், அணையின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்து வருகிறது.

தேனி மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால், வைகை அணைக்கு நீர் வரத்து இல்லை. இந்நிலையில், முல்லைப் பெரியாறு அணையில் இருந்து வெளியேற்றப்

படும் நீரின் மூலம், வைகை அணையின் நீர் மட்டம் கடந்த வெள்ளிக்கிழமை 52 அடியாக உயர்ந்தது. எனவே, கடந்த வெள்ளிக்கிழமை முதல் பாசனத்துக்கு 900 கன அடியும் மற்றும் மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்துக்காக 60 கன அடியும் சேர்த்து மொத்தம் 960 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால், கடந்த 6 நாள்களில் அணையின் நீர் மட்டம் 2 அடிக்கும் மேல் குறைந்துள்ளது. புதன்கிழமை காலை நிலவரப்படி அணைகளின் நீர் மட்டம்: முல்லைப் பெரியாறு: நீர் வரத்து - 132.70 அடி (152), நீர் வரத்து - 782 கன அடி, நீர் வெளியேற்றம் - 500 கன அடி. வைகை அணை: நீர் வரத்து - 49.77 அடி (152), நீர் வரத்து - 138 கன அடி, நீர் வெளியேற்றம் - 960 கன அடி.

மழைப் பொழிவு: பெரியாறு - 1.60 மி.மீ., தேக்கடி - 1.20 மி.மீ.

## நெல் பயிரைத் தாக்கும் சிலந்தியை ஒழிப்பது எப்படி?



நெல் பயிரைத் தாக்கும் சிலந்தி இனங்களை அழிப்பது தொடர்பான முறைகளைக் கையாண்டு, தங்களுக்கு நஷ்டம் ஏற்படாமல் விவசாயிகள் பார்த்துக் கொள்வது அவசியம். பொதுவாக, நெல் பயிரை ஜூலை மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையில் "ஒலிகொநிகஸ்ஒரைசி' எனப்படும் ஒரு வகையான சிலந்தி இனங்கள் தாக்கும். இதன் தாக்குதல் காரணமாக, நெல் பயிர் அதிக சேதமடைந்து விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்திவிடும். இந்த வகையான சிலந்தி தாக்குதலில் இருந்து விவசாயிகள் தங்களது பயிர்களை தற்காத்துக் கொள்வது மிகவும் அவசியம். நெல் பயிரைச் சேதப்படுத்தும் சிலந்திகள் ஒழிப்பு முறை குறித்து திரூர் வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் ஏ.சுமதி கூறியதாவது: திருவள்ளூர் மாவட்டத்தில் தற்போது ஒதிக்காடு,

கிளாம்பாக்கம், பொன்னேரி, திரூர், பூரிவாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பயிர்களில் தற்போது "ஒலிகொநிகஸ்ஒரைசி' என்ற சிலந்தியின் தாக்குதல் அதிக அளவில் உள்ளது. வெப்பநிலை, ஈரப்பதம் அதிக அளவில் நிலவும் ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் இந்த சிலந்தியின் தாக்குதல்கள் நெற்பயிரில் அதிகமாக காணப்படும். இந்த சிலந்தி தாக்குதலின் அறிகுறியாக, பயிர்களின் அடி இலைகளில் மஞ்சள் கலந்த வெள்ளை நிற துகள்கள் போன்ற புள்ளிகள் தோன்றும். இலை நரம்புகளுக்கிடையில் உள்ள பகுதி வெளுத்துக் காணப்படும். பின்னர், அனைத்து இலைகளிலும் இப்புள்ளிகள் பரவி வெண்ணிறமாக மாறிவிடும். இதனால் பயிரில் ஒளிச்சேர்க்கை செய்வது தடைபட்டு மகசூல் இழப்பு ஏற்படும்.

**கட்டுப்படுத்தும் முறை:**

இந்த பூச்சித் தாக்குதலில் இருந்து பயிர்களைப் பாதுகாக்க, வயலுக்கு தண்ணீர் பாய்ச்ச வேண்டியது அவசியம். பின்னர், புரபார்கைட் 1.5 மில்லிலிட்டர் அல்லது பெனசாகுயின் 1.5 மில்லிலிட்டர் என்ற அளவில் இரண்டு முறை 15 நாள்கள் இடைவெளியில் தெளித்து இந்த சிலந்தியைக் கட்டுப்படுத்தலாம் என்றார்.

இதுகுறித்து மேலும் விவரங்ரகளை அறிய, திரூர் வேளாண் அறிவியல் நிலையப் பேராசிரியரும், தலைவருமான ஆர்.அகிலாவை அணுகலாம்.

**<u>சிறு தானியங்களின் முக்கியத்துவத்தை உணர்த்த பாரம்பரிய உணவுத் திருவிழா</u>**

மக்களுக்கு சிறு தானியங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தவே பாரம்பரிய உணவுத் திருவிழா நடத்தப்படுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் புறநகர் பகுதியான துறைமங்கலத்தில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் சார்பில், பாரம்பரிய உணவுத் திருவிழாவை செவ்வாய்க்கிழமை குத்துவிளக்கேற்றி தொடக்கிவைத்து அவர் மேலும் பேசியது:

பாரம்பரிய சிறு தானியங்களான வரகு, சாமை, திணை, கம்பு சோளம், கேழ்வரகு, குதிரை வாலி ஆகியவற்றை பயன்படுத்துவதால் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துகள் சரியான அளவில் கிடைக்கிறது. மாறிவரும் நாகரிக வளர்ச்சியால் நகர்ப்புற மக்களிடையே சிறு தானியங்களின் பயன்பாடு குறைந்து வருகிறது.

தற்போது, கிராமப்புற மக்களும் தங்களது அன்றாட உணவில் சிறு தானியங்களை மிகவும் குறைவாகவே பயன்படுத்தி வருகின்றனர். சிறுதானியங்கள் பயிரிடப்படும் பரப்பளவும், விளைச்சலும் குறைந்து வருகிறது. சிறு தானியங்களில்

ஊட்டச்சத்துகளின் அளவு அதிகமாக உள்ளதால், அதன் முக்கியத்துவம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. எனவே, சிறுதானிய உணவின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவத்தை மக்களிடம் கொண்டு சென்று, அவற்றை பயன்படுத்துவதற்காகவே பாரம்பரிய உணவுத் திருவிழா நடத்தப்படுகிறது. இதில் பங்கேற்கும் அறிஞர்கள் உணவுக் கலாசாரம், இயற்கை விவசாயம், வீட்டுத் தோட்டம், மரபுசார் வேளாண்மை, சுற்றுச்சூழல் குறித்து உரையாற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பாரம்பரிய உணவுப் பொருள்கள் தயாரிப்பது குறித்து விளக்கம் அளிக்கவும், பாரம்பரிய உணவுப் பொருள்களில் தயாரிக்கப்பட்ட தின்பண்டங்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என்றார் ஆட்சியர். தொடர்ந்து, மருத்துவர் கு. சிவராமன், பாரம்பரிய உணவுப் பொருள்கள் குறித்து சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில், பெரம்பலூர் தொகுதி மக்களவை உறுப்பினர் ஆர்.பி. மருதராஜா, நகர்மன்றத் தலைவர் சி. ரமேஷ், ஒன்றியக் குழுத் தலைவர்கள் து. ஜெயக்குமார், என். கிருஷ்ணக்குமார், ர. வெண்ணிலா, மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் என். சேகர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் தி. புவனேஸ்வரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இலவச <u>ஆடு, மாடு வழங்கும் திட்டம் நிறுத்தம்! கோமாரி தடுப்பூசி பணிகள் காரணம்</u>**

காஞ்சிபுரம் : கறவை மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டு வருவதால், அரசின் சார்பில் வழங்கப்படும் இலவச ஆடு மற்றும் கறவை மாடு வழங்கும் திட்டம், தற்காலிகமாக செப்டம்பர் மாதம் முழுவதும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஊராட்சித் தலைவர், துணை தலைவர், சுய உதவி குழு உறுப்பினர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஆதி திராவிடர் நல துறை மற்றும் உதவி கால்நடை

மருத்துவர் அடங்கிய ஏழு பேர் கொண்ட குழு ஆய்வு செய்து, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள பயனாளிகளை தேர்வு செய்கின்றனர். ஏழாம் கட்ட முகாம் : இந்த குழுவால் தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு, அரசின் சார்பில் இலவச ஆடுகள் அல்லது கறவை மாடு வழங்கப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டக்கில், 2014 - 15ம் ஆண்டிற்கு 900 கறவை மாடுகளும், 6,439 யூனிட் ஆடுகளும் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதம் வரை, 600 கறவை மாடுகளும், 3,586 யூனிட் ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன.இந்த நிலையில், மாவட்ட கால்நடை துறை சார்பில், கடந்த, 1ம் தேதி முதல், கறவை மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் ஏழாம் கட்ட முகாம் நடத்தப்பட்டு வருகிறது.ஏழாம் கட்டமாக நான்கு லட்சத்திற்கும் அதிகமான கறவை மாடுகளுக்கு, கோமாரி தடுப்பூசி போடும் பணியில் கால்நடை துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.இதன் காரணமாக, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு, அரசின் சார்பில் வழங்கப்படும் இலவச ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் திட்டம் செப்டம்பர் மாதம் முழுவதும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 1,500க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு செப்டம்பர் மாதம் கிடைக்க வேண்டிய, இலவச ஆடு, மாடுகள் வழங்கப்படவில்லை. கோமாரி தடுப்பூசி முகாம் முடிந்தவுடன் அடுத்த மாதம் முதல் வழக்கம்போல், இலவச ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என, கால்நடை துறை தெரிவித்துள்ளது.

**அடுத்த மாதம் முதல்...** இதுகுறித்து, கால்நடை துறை அலுவலர் ஒருவர் கூறியதாவது: செப்டம்பர் மாதம் மாவட்டம் முழுவதும் உள்ள கறவை மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போடுவதால், அரசின் இலவச ஆடுகள் மற்றும் மாடுகளை வழங்கும் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால், கால்நடைகளை கொள்முதலும் நிறுத்தப்பட்டு உள்ளது. அடுத்த மாதம் முதல் வழக்கம்போல், மாவட்டத்தில் உள்ள பயனாளிகளுக்கு இலவச ஆடுகள் மற்றும் மாடுகள் வழங்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

**கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்**

உளுந்தூர்பேட்டை: பாண்டூர் கிராமத்தில் கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம் பணிகளை திருக்கோவிலூர் கோட்ட கால்நடை பராமரிப்பு உதவி இயக்குனர் டாக்டர் சுபேந்திரன் நேரில் ஆய்வு செய்தார். உளுந்தூர்பேட்டை தாலுகா செங்குறிச்சி கால்நடை உதவி மருந்தகத்தை சேர்ந்த பாண்டூர் கிராமத்தில் தமிழக அரசின் கால்நடை பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம் நடந்தது. கால்நடை

உதவி மருத்துவர் டாக்டர் சுரேஷ்குமார் தலைமை தாங்கி 350 கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தார். முகாம் பணிகளை திருக்கோவிலார் கோட்ட கால்நடை பராமரிப்பு உதவி இயக்குனர் டாக்டர் குபேந்திரன் நேரில் ஆய்வு செய்தார். கால்நடை ஆய்வாளர் கந்தன், பயிற்சி ஆய்வாளர் சிலோசிலின்ராணி, உதவியாளர் பாபு, கால்நடை வளர்ப்போர் உடனிருந்தனர்.

**கால்நடை முகாம்**

அவலார்பேட்டை: மேல்மலையனூர் ஒன்றியம் கரடிக்குப்பம் கிராமத்தில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கோமாரி நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் சிறப்பு முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் சசிகுமார் முகாமை துவக்கிவைத்தார். துணை தலைவர் ராணி முன்னிலை வகித்தார். ஊராட்சி செயலாளர் சரவணன் வரவேற்றார். டாக்டர் துரைமுருகன் தலைமையில் கால்நடை ஆய்வாளர்கள் தட்சணாமூர்த்தி, முகமது நியாசுதீன், உதவியாளர்கள் விஜயகுமார் ஆகியோர் 325 மாடுகளுக்கு தடுப்பூசி அளித்து சிகிச்சை மேற்கொண்டனர்.

**<u>வேளாண் அறிவியல் நிலையத்தில் சிறு தொழில் முனைவோராக பயிற்சி</u>**

பாலக்கோடு: பாலக்கோடு அடுத்த, பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகள், பண்ணை மகளிர், இளைஞர்கள் மற்றும் பெண்கள் சிறு தொழில் முனைவோராக மாற பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.இதில், ஒரு கட்டமாக சிறு தானியங்களில் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பது குறித்த பயிற்சி முகாம் நடந்தது. திட்ட ஒருங்கிணைப்பாளர் தமிழ்செல்வன் சிறு தானியங்கள் மதிப்பு கூட்டுதலின் முக்கியத்துவம் குறித்து பேசினார். வேளாண்மை விரிவாக்க துறை உதவி பேராசிரியர் வெண்ணிலா, சிறு தானிய சாகுபடி குறித்து பேசினார். பேராசிரியர் ஜோதிலட்சுமி, சிறுதானியங்களில் உள்ள சத்துக்கள் மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்தும், அவற்றை உணவில் சேர்த்து கொள்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் பேசினார். மதுரை லட்சுமி புட்ஸ் நிறுவன இயக்குனர் கண்ணன், சிறுதானியங்களில் இருந்து, பல்வேறு உணவுகள் தயாரிப்பு, ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் குறித்து விளக்கமாக எடுத்துரைத்தார். விவசாயிகளுக்கு, வேளாண்மை அறிவியல் நிலையத்தில் உள்ள உணவு சம்பந்தப்பட்ட பல்வேறு இயந்திரங்களில், செயல்முறை விளக்கம் மற்றும் சிறு தானிய அடைமிக்ஸ், கம்பு மக்காசோளம், புட் மிக்ஸ் போன்றவை தயாரிப்பது குறித்து செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. சிறு தொழில் துவங்க ஆர்வம்

உள்ளவர்கள், பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மையத்தில், நேரிலோ அல்லது, 04342-245860 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு, பயனடையலாம்.

**நிரம்பியது எமரால்டு அணை**

மஞ்சூர் : நீலகிரி மாவட்டத்தில் உள்ள 12 மின் நிலையங்கள் மூலம் தினமும் 833 மெகாவாட் மின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடப்பாண்டு துவக்கத்தில், அணைகளில் போதுமான தண்ணீர் இல்லாததால், மின் உற்பத்தியில் சிக்கல் ஏற்பட்டது. இந்நிலையில், சில மாதங்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதில், மின் உற்பத்திக்கு பயன்படும் அப்பர் பவானி, அவலாஞ்சி, குந்தா, மாயார், கெத்தை அணைகள் முழு கொள்ளளவை எட்டியுள்ளன. தற்போது, ஊட்டி அருகேயுள்ள எமரால்டு அணையும் நிரம்பியுள்ளது.மின் வாரிய அதிகாரி ஒருவர் கூறுகையில், 'மாவட்டத்தில் மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் முக்கிய அணைகளில் தண்ணீர் இருப்பு படிப்படியாக உயர்ந்து முழு கொள்ளளவை எட்டியுள்ளது. மின் உற்பத்தியும் தடையின்றி நடந்து வருகிறது' என்றார்.

**ஒரு லட்சம் ரூபாய்க்கு வாழைத்தார் ஏலம்**

திருச்சி: ஒருங்கிணைந்த திருச்செந்துறை வணிக வளாகத்தில், ஒரு லட்சம் ரூபாய் மதிப்பிலான வாழைத்தார் ஏலம் விடப்பட்டது. திருச்சி அருகே, திருச்செந்துறை வணிக வளாகத்தில், வாழைத்தார் ஏலம் நடந்தது. இதில், கரூர் மாவட்டம் குளித்தலை, தஞ்சை மாவட்டம், ஒரத்தநாடு, ஈச்சாங்கோட்டை, திருச்சி, அந்தநல்லூர், ஜீயபுரம் ஆகிய இடங்களில், 12 விவசாயிகள், 429 வாழைத்தார்களை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். பூவன், ரஸ்தாளி, மொந்தன், கற்பூரவள்ளி உள்ளிட்ட வாழைத்தார்கள் அதிகளவில் இருந்தது. 14 வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்றனர். அதிகப்பட்சமாக ஒரு வாழைத்தார், 480 ரூபாய்க்கும், சராசரியாக, 249 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, ஒரு லட்சத்து ஏழாயிரத்து, 42 ரூபாய் மதிப்பில் வாழைத்தார் ஏலம் நடந்தது.

**புறநகர் காய்கறி விற்பனை திட்டம்; மாவட்டங்களில் துவக்க முடிவு**

திண்டுக்கல் : சென்னை, கோவையில் செயல்படும் புறநகர் காய்கறி திட்டத்தை தென்மாவட்டங்களில் அறிமுகப்படுத்த தோட்டக்கலைத்துறையினர் முடிவு செய்துள்ளனர். திண்டுக்கல் மாவட்ட தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் ராமநாதன் கூறியதாவது: "தமிழகத்தில் பெருநகரங்களான சென்னை, கோவையில்

செயல்படும், "புறநகர் காய்கறி கிட்டம்' கிருச்சியை மண்டலமாக வைக்கு தென்மாவட்டங்களில் இருக்கும் விவசாயிகள் பயன்பெறும் வகையில் விரிவுபடுக்கப்பட உள்ளகு. இகில், அரியலூர், பெரம்பலூர், கரூர், கிண்டுக்கல் ஆகிய பகுகிகளில் விளைவிக்கும் காய்கறிகளை குளிர்பகன வாகனங்களில் வைத்து திருச்சியிலுள்ள விற்பனை மையத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்துள்ளோம்.முதற்கட்டமாக திண்டுக்கல் மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம், ரெட்டியார்சக்கிரம், தொப்பம்பட்டி, வடமதுரை, நிலக்கோட்டையில் காய்கறிகள் சாகுபடி செய்வதற்கான விவசாயிகளை தேர்வு செய்ய உள்ளோம். இந்த காய்கறிகளை விளைவிக்கும் விவசாயிகள், சொட்டு நீர் பாசன வசதியுள்ள, அதிக அனுபவம் பெற்றவராக இருத்தல் அவசியம். ஆர்வமுள்ள விவசாயிகளை தேர்வு செய்து, அவர்களை 50 உற்பத்திக் குழுக்களாக பிரித்த பின்னர், அதிலிருந்து ஆயிரம் விவசாயிகள் தேர்வு செய்யப்படுவர். காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு செல்வதற்கான "பிரீஷர்' வாகனங்களுக்கு 40 சதவீத மானியம் வழங்கப்படும். அதற்கான காய்கறிகள் சேகரிக்கும் மையங்களாக ஒட்டன்சத்திரம், ரெட்டியார்சக்கிரம், அய்யலூர் ஆகிய இடங்களை தேர்வு செய்துள்ளோம். விவசாயிகள் காய்கறிகளை விளைவிப்பதற்கான மானியம் ஒரு எக்டேருக்கு சாதாரண விதை ரகங்களுக்கு ரூ.22 ஆயிரமும், வீரிய ரக ஒட்டு காய்கறிகளுக்கு ரூ.30 ஆயிரமும் வழங்கப்படும்.இதுதவிர சில்லரை வணிகக்கிற்கான மானியமும் அளிக்கப்படும். விரைவில் தென்மாவட்டங்கள் முழுவதும் "புறநகர் காய்கறி கிட்டம்' விரிவுபடுக்கப்படும். இதனால், விவசாயிகள் காய்கறிகளின் உற்பத்தியை அதிகரிக்க முடியும். இழப்பு ஏற்படுவதை தடுக்கலாம். சேதாரம் குறையும் அதே சமயத்தில் அதிக லாபமும் கிடைக்கும்.' என்றார்.

**நெற்பயிரில் திடீர் நோய் தாக்குதல்; அதிர்ச்சியில் கம்பம் விவசாயிகள்**

கம்பம் : முல்லைப் பெரியாறு பாசனத்தில் கூடலூர் முதல் பழனிசெட்டிபட்டி வரை 14 ஆயிரத்து 707 ஏக்கரில் இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. பருவ மழை, அணையின் நீர் மட்டத்தை பொறுத்தே நெல் சாகுபடி நடைபெறும். கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால், முதல் போக சாகுபடி கைவிடப்பட்டது. இந்நிலையில் இந்த ஆண்டு பருவ மழை, அணையின் நீர் மட்டம் திருப்திகரமாக இருந்ததால் விவசாயிகள் சந்தோஷமாக முதல் போக நெல் சாகுபடியை துவக்கினார்கள். முதல் போக சாகுபடியில் கடந்த சில ஆண்டுகளாகவே வீரிய ஒட்டுரகங்களை பயன்படுத்துகின்றனர். கோவை விவசாய பல்கலைக்கழகம்

பரிந்துரைக்க ஏடிடி 39, 36 போன்ற ரகங்களை கண்டு கொள்வதில்லை. விவசாயத்துறையினரும் விவசாயிகளை வற்புறுத்துவதில்லை. எனவே வீரிய ஒட்டுரக விதைகளை கூடுதல் விலை கொடுத்து வாங்கி சாகுபடி செய்கின்றனர். நடவு செய்து இரண்டு மாதங்களை நெருங்குகிறது. இந்நிலையில் கம்பம் வீரப்பநாயக்கன்குளம், சின்னவாய்க்கால், சுருளிப்பட்டி உள்ளிட்ட சில பகுதிகளில் நெற்பயிரில் ஒருவித நோய் தாக்கி பரவி வருகிறது. பச்சை முழுவதும் மாறி மஞ்சளாக வளர்ச்சி குன்ற ஆரம்பித்துள்ளது. என்ன மருந்து தெளிப்பது, என்ன தடுப்பு நடவடிக்கை எடுப்பது எனத் தெரியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். இது தொடர்பாக விவசாயத்துறையினரிடம் கேட்டதற்கு, " கடந்த சில நாட்களாக இதுமாதிரி பயிரில் மாற்றங்கள் இருப்பதாக நேற்று தான் தகவல் கிடைத்தது.உடனடியாக உதவி விவசாய அலுவலர்கள், வயல்களில் ஆய்வு செய்து வருகின்றனர். என்ன நோய், என்ன மாதிரியான பூச்சி மருந்துகள் தெளிக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு ஆய்விற்கு பின் தெரிவிக்கப்படும்' என்றனர். கடந்த ஆண்டும் இதே நேரத்தில் இதே போன்று நோய் தாக்கியது குறிப்பிடத்தக்கது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>தேயிலைக்கு தங்க இலை விருது</u>



மஞ்சூர்: தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கத்தின்(உபாசி) சார்பில் தேயிலையை பிரபலப்படுத்த ஆண்டு தோறும் சிறந்த தேயிலை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு தங்க இலை (கோல்டன் லீப்) விருதுகள் வழங்கப்படுகின்றன. நடப்பு ஆண்டு தங்க இலை விருதுக்கான போட்டி குன்னூரில் நடந்தது. இதில் தொழிற்சாலைகள், சிறு தேயிலை உற்பத்தியாளர்களால் தயாரிக்கப்பட்ட தேயிலைகள் நிபுணர் குழுவினரால் ஆய்வுகள் நடத்தப்பட்டன. இதில் யுனைடெட் நீலகிரி டீ எஸ்டேட்டின் கோரகுந்தா தொழிற்சாலையில் உற்பத்தி செய்த ஆர்கானிக் லீப், ஆர்கானிக் பேனீங்ஸ் தேயிலைக்கு 2 தங்க இலை விருதுகள் கிடைத்துள்ளது.

**<u>அமிர்தி நீர்வீழ்ச்சியில் தண்ணீரை சேமிக்க ரூ.2.66 லட்சத்தில் தடுப்பணை</u>**

வேலூர், : வேலூர் மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத்தலங்களில் வேலூர் அருகே உள்ள அமிர்தியும் ஒன்று. இங்குள்ள சிறுவன உயிரியல் பூங்கா மற்றும் நீர்வீழ்ச்சியை ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து பார்வையிட்டு செல்கின்றனர். இந்த நீர்வீழ்ச்சிக்கு பங்குனி நீர்வீழ்ச்சி என்ற மற்றொரு சிறப்பு பெயரும் உண்டு. ஜவ்வாது மலைதொடரில் அமைந்துள்ள அமிர்திக்கு மேற்புறத்தில் உள்ள பாலாம்பட்டு மலை கிராமத்தில் இருந்துவரும் மழைநீர் நீரோடைகள் வழியாக கொட்டாற்றில் கலந்து பங்குனி நீர்வீழ்ச்சியை அடைகிறது. பின்னர் அங்கிருந்து நாகநதியில் கலந்து கண்ணமங்கலத்தில் உள்ள ஏரியில் முடிவடைகிறது. மழைகாலங்களில் நீர்வீழ்ச்சி வழியாக வரும் மழைநீர் தடுப்பணை கட்டாததால், வழியில் எங்கும் தேங்காமல் தடையின்றி கரைபுரண்டு ஓடுகிறது. இதனால் மழைக்காலம் முடிந்து கோடை காலம் தொடங்கும் நேரத்தில் ஒருசில நாட்கள் மட்டுமே நீர்வீழ்ச்சியில் தண்ணீர் காணமுடிகிறது. பின்னர் நாளடைவில் கொட்டாறு தண்ணீரின்றி வறண்டு பாலைவனமாக காட்சியளிப்பதுடன், காட்டில் உள்ள வன விலங்குகள் குடிப்பதற்கு கூட தண்ணீர் இல்லாத அவலநிலையும் ஏற்படுகிறது. அந்த நேரத்தில் தண்ணீரை தேடி ஊருக்குள் நுழையும் வனவிலங்குகள் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகிறது. இதனை கட்டுப்படுத்தும் வகையிலும், வன விலங்குகள் குடிக்க தண்ணீரை சேமிக்கும் நோக்கத்திலும் நீர்வீழ்ச்சிக்கு மேற்புறத்தில் தடுப்பணை ஒன்று கட்ட வனத்துறை முடிவெடுத்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டது.

அதன்படி அமிர்தி நீர்வீழ்ச்சிக்கு மேற்புறத்தில் தடுப்பணை கட்டுவதற்கு, வனத்துறை சார்பில் கடந்த மாதம் வன விலங்குகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.2 லட்சத்து 66 ஆயிரத்து 200 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கடந்த மாதம் பணிகள் தொடங்கப்பட்டன. பணி தற்போது 75 சதவீத பணிகள் முடிவடைந்து விட்டது. மீதியுள்ள பணிகளும் விரைவில் முடிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து வனத்துறை அதிகாரிகள் கூறுகையில், நீர்வீழ்ச்சிக்கு மேற்புறத்தில் தடுப்பணை கட்டுவதால் மழைக்காலத்தில் வெள்ளப்பெருக்கின் வேகம் குறையும். தண்ணீர் தடுப்பணையில் தேங்குவதோடு, நிலத்தடி நீர்மட்டம் உயரும். மேலும் தடுப்பணையில் தேங்கும் தண்ணீர் வனவிலங்குகள் குடிப்பதற்கும் போதுமானதாக இருக்கும். இந்த தடுப்பணை கட்டிமுடிக்கப்பட்டு விரைவில் பயன்பாட்டுக்கு கொண்டுவரப்படும். என்றனர்.

## <u>பரமத்திவேலூரில் வெற்றிலை விலை உயர்வு</u>

பரமத்திவேலூர், : பரமத்திவேலூரில் வெற்றிலை விலை உயர்ந்துள்ளது. நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் வட்டம் பகுதியில், அதிகளவில் வெற்றிலை பயிரிடப்படுகிறது. இங்கு விளையும் வெற்றிலை, பரமத்தி வேலூர் நான்கு ரோட்டில் நடக்கும் ஏலத்தில் விற்பனை செய்யப்படுகிறது. இதில், தமிழகம் முழுவதும் மற்றும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் வந்து ஏலம் எடுத்து செல்வது வழக்கம். கடந்த வாரம் கற்பூரி முதல் ரகம் வெற்றிலை ரூ1500க்கும், இரண்டாவது ரகம் ரூ1000 க்கும் ஏலம் போனது. வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம் ரூ3500 க்கும், இரண்டாவது ரகம் ரூ3000 க்கும் ஏலம் போனது. இந்த வாரம் கற்பூரி வெற்றிலை முதல் ரகம் ரூ2000 க்கும், இரண்டாவது ரகம் ரூ1500 க்கும் ஏலம் போனது. அதே போல் வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம் ரூ4000 க்கும், இரண்டாவது ரகம் ரூ3500 க்கும் ஏலம் போனது. திருமணம் போன்ற விசேஷங்களால் வெற்றிலையின் தேவை அதிகரித்து, விலை உயர்ந்துள்ளது.

## கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்

திருத்துறைப்பூண்டி, : தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத்துறை, திருத்துறைப்பூண்டி ரோட்டரி சங்கம் சார்பில் இரண்டாவது நாளாக நேற்று திருத்துறைப்பூண்டி பெரியசிங்களாந்தி கிராமத்தில் கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம் நடைபெற்றது. ரோட்டரி சங்கத்தலைவர் வக்கீல் ராஜாராம் தலைமை வகித்தார். சேர்மன் கிருஷ்ணமூர்த்தி முன்னி லை வகித்தார். செய்திதொடர்பாளர் சதாபத்மநாதன்வரவேற்றார். முகாமை எம்எல்ஏ உலகநாதன் தொடங்கி வைத்தார். கால்நடை உதவி இயக்குநர் முகமதுகான் தலைமையில் டாக்டர்கள் ராமலிங்கம், காவ்யா, சுரேந்தர் கொண்ட மருத்துவக்குழுவினர் கட்டிமேடு, ஆதிரெங்கம், நெடும்பலம், சேகல் கோட்டகம் ஆகிய கிராமங்களில் ஆடு, கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்து, 1400 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர். முகாமில் ரோட்டரி சங்க நிர்வாகி செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வேளாண் ஆலோசனை குழு அமைப்பு

திருத்துறைப்பூண்டி, : தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தால் வேளாண்மையை மேம்படுத்தவும், உழவர்களின் கருத்துகளை கேட்டறிய ஆலோசனை குழு துணை வேந்தர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள திருத்துறைப்பூண்டி நெல் ஜெயராமன் கூறியது: துணைவேந்தர் உழவர்களுடைய கருத்துகளையும் கேட்டறிந்து காலபருவ சூழ்நிலைக்கேற்ப விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் அமைய ஆலோசனை குழுவை அமைத்துள்ளார். இந்த குழு மூலம் வேளாண்மை துறைக்கும், வேளாண்மை பல்கலை கழகத்திற்கும், உழவர்கள் தங்கள் மேலான கருத்துகளையும், தகவல்களையும், ஆலோசனைகளையும் வழங்குவதன் மூலம் ஆராய்ச்சிகளை முன்னெடுத்து செல்லவும் வழி வகுக்கப்பட்டுள்ளது என்றார்.

**ஓந்தாம்பட்டி கால்நடை கிளை நிலையம் மருந்தகமாக தரம் உயர்வு கலெக்டர் தகவல்**

அரவக்குறிச்சி, : அரவக்குறிச்சி அருகேயுள்ள ஓந்தாம்பட்டி கால்நடை கிளை நிலையம் மருந்தகமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாக கலெக்டர் தெரிவித்தார். அரவக்குறிச்சியை அடுத்த மலைக்கோவிலூர் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது.அரவக்குறிச்சி ஒன்றியம் நாகம்பள்ளி ஊராட்சி மலைக்கோவிலூர் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நேற்று நடந்தது. கலெக்டர் ஜெயந்தி தலைமை வகித்தார். இம்முகாமில் கலெக்டர் பேசுகையில்: அரசின் நலத்திட்டங்கள் அனைத்து பகுதிகளிலும் நேரடியாக மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் மாதம் ஒருமுறை ஒரு கிராமத்தை தேர்வு செய்து அங்கு அனைத்து துறை அலுவலர்களும் முகாமிட்டு பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. இங்கு 94 மனுக்கள் பெறப்பட்டு 77 மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது. 17 மனுக்கள் பரிசீலனையில் உள்ளது. சிறப்பு குறை தீர் முகாம்களில் பட்டா மாறுதல் உட்பட வருவாய்த் துறையின் மூலம் பெறப்படும் சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்படுகிறது. பெண் கல்வியை ஊக்கப்படுத்தும் வகையில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு படித்த பெண்களின் திருமணத்திற்கு தாலிக்கு 4 கிராம் தங்கம் மற்றும் உதவித்தொகை வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது.. கல்வித்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பாடப்புத்தகம் சீருடை உட்பட பல்வேறு உதவித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது சத்துணவில் ஐந்து வகை கலவை சாதம், மசாலா முட்டையும் வழங்கப்பட்டு வருகிறது. அங்கன்வாடிகளில் கர்ப்பிணி பெண்களுக்கு தேவையான ஊட்டச்சத்துகள் வழங்கப்படுவதாலும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்ப காலத்தில் செய்ய வேண்டிய பரிசோதனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்படுவதாலும் நமது மாவட்டத்தில் தாய்மார்கள் பிரசவத்தின்போது இறப்பைத் தடுக்கும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு

முகாம்கள் வட்டார அளவில் நடத்தப்பட்டு வருகிறது. மேலும் மாற்றுத் திறனாளிகளுக்கு பல்வேறு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது. முதலமைச்சர் இப்பகுதியில் உள்ள ஓந்தாம்பட்டி கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தி உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் இப்பகுதி விவசாயிகளின் கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவ உதவி கிடைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் அனைவரும் அரசின் நலத்திட்ட உதவிகளை முழுமையாக பயன்படுத்தி தங்கள் பொருளாதாரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும் இவ்வாறு அவர் பேசினார்.பின்னர் முதியோர் உதவித்தொகைக்கான உத்தரவு 16 பயனாளிகளுக்கும் , இயற்கை மரணம் உதவித்தொகை 8 நபர்களுக்கு ரூ.87,500 மதிப்பிலும், திருமண உதவித்தொகை 2 பேருக்கு ரூ.18,000 மதிப்பிலும் இலவச வீட்டு மனைப்பட்டா 3 நபேருக்கு ரூ.21,000 மதிப்பிலும், வேளாண்மைத்துறை மூலம் 4 பயனாளிகளுக்கு ரூ. 4,185 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தோட்டக்கலைத்துறையின் மூலம் 2 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் கலெக்டர் வழங்கினார். பொது சுகாதாரத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை தொடர்பான கண்காட்சிகளை கலெக்டர் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் கரூர் கோட்டாட்சியர் கார்த்திகேயன், சுகாதார பணிகள் துணை இயக்குநர் நளினி, வேளாண்மை இணை இயக்குநர் தெய்வேந்திரன் தனித்துணை ஆட்சியர்கள் சென்னியப்பன், ஒன்றியக்குழு உறுப்பினர் தமிழ்மணி, தாசில்தார் மூர்த்தி, நாகம்பள்ளி ஊராட்சித் தலைவர் பழனியம்மாள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். இம்முகாமில் 90 பயனாளிகளுக்கு ரூ. 20.5 லட்ச மதிப்பு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

**திருந்திய நெல் சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறலாம் உழவர் பயிற்சி நிலையம் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்**

அன்னவாசல், : குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலையத்தின் சார்பில் சேரனூரில் கிராம அளவிலான விவசாயிகளுக்கு பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியில் சம்பா நெல் சாகுபடித் தொழில்நுட்பங்கள் குறித்து 25 விவசாயிகளுக்குப் பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியினை உழவர் பயிற்சி நிலைய வேளாண்மைத் துணை இயக்குநர் சாந்தி தலைமை வகித்து துவக்கி வைத்து பேசுகையில், நடப்புச் சம்பாப் பருவத்தில் விவசாயிகள் திருந்திய நெல் சாகுபடி முறையில் நெல்சாகுபடி மேற்கொள்ள வேண்டும். இதனால் விதையளவு குறைவதுடன் நீர்த் தேவையும் குறையும். மேலும் திருந்திய நெல் சாகுபடி முறையில் ஏக்கருக்கு ஏறத்தாழ 5 டன் வரை மகசூல் பெறலாம் என்றார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் ராஜசேகரன் பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுக்குச் சம்பா நெல் சாகுபடித் தொழில்நுட்பங்கள், குறிப்பாக ரகங்கள் மற்றும் விதைகள் தேர்வு, விதைநேர்த்தி முறைகள், நாற்றங்கால் பராமரிப்பு, நடவு முறைகள், உர நிர்வாகம், களை மேலாண்மை மற்றும் நீர் நிர்வாகம் குறித்தும் காண்கேள் சாதனங்கள் மூலம் விளக்கினார். மேலும், பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு மண் பரிசோதனை முக்கியத்துவம் மற்றும் மண் மாதிரி எடுக்கும் முறைகள், நுண்சத்து இடுவதன் அவசியம் ஆகியவை குறித்து விளக்கிக் கூறப்பட்டது. இப்பயிற்சியில் கலந்துகொண்ட விவசாயிகளுக்கு திருந்திய நெல் சாகுபடித் தொழில்நுட்பங்கள் மற்றும் நிலக்கடலைச் சாகுபடித் தொழில்நுட்பங்கள் அடங்கிய கையேடுகள், பயிற்சி ஊக்கத்தொகை ஆகியவை வழங்கப்பட்டன. இப்பயிற்சியில் சேரனூரைச் சேர்ந்த விவசாயிகள் வேளாண் குறித்த தங்கள் சந்தேகங்களைக் கேட்டறிந்தனர். இப்பயிற்சியில் பொன்னமராவதி வட்டார உதவி வேளாண் அலுவலர் முருகேசன், வட்டாரத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கமளித்தார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உழவர் பயிற்சி நிலைய உழவர் மன்ற அமைப்பாளர் மெய்யன் செய்திருந்தார். பயிற்சியின் நிறைவில் உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் ராஜசேகரன் நன்றி கூறினார்.

**<u>மக்காச்சோளம் நீர்த்தேவையை குறைத்து அதிக மகசூலை தருகிறது வேளாண் அதிகாரி தகவல்</u>**

ஆலங்குடி, . ஆலங்குடியை அடுத்த வம்பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் நிலையப் பயிற்சி மையத்தில் குன்றாண்டார்கோவில், குளத்தூர் தாலுகா பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மக்காச்சோளம் பயிரிடுவது குறித்த ஒரு நாள் பயிற்சி நடந்தது. இப்பயிற்சியை வேளாண் அறிவியல் நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் ஞானமலர் துவக்கி வைத்து பேசுகை யில், தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் தானியப் பயிர்களில் மக்காச்சோளத்தின் முக்கியத்துவம் ஆண்டுதோறும் அதிகரித்துவருகிறது. மக்காச்சோளமானது நெற்பயிரின் நீர்த் தேவையை மூன்றில் ஒரு பங்கு குறைத்து அதிக மகசூலைத் தருகிறது. ஆகையினால் நீர்ப் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு வீரிய ரக மக்காச்சோளப் பயிரினை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் பரிந்துரைக்கும் மேன்மையான தொழில்நுட்பங்களின் மூலம் பயிரிடுவதினால் குறிப்பிடத்தக்க மகசூலை பெற முடியும் என்றார். உதவிப்பேராசிரியர் மதியழகன் கூறுகையில், மக்காசோளத்தில் அதிக மகசூல் பெற மக்காசோளத்திற்கு தேவையான ஊட்டச்சத்துக்கள் வளர்ச்சி ஊக்கிகள் கலந்த பூஸ்டர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் கண்டுபிடிப்பான மக்காச்சோள மேக்சீம் பற்றிய முக்கியத்துவத்தையும் அதனை பயன்படுத்தும் முறையையும் எடுத்துரைத்தார். பயிற்சியின் துவக்கத்தில் உதவிப் பேராசிரியர் மாரிமுத்து வரவேற்றார். உதவிப் பேராசிரியர் கீதா செயல்விளக்கத்தை ஒருங்கிணைத்து நடத்தி நன்றி கூறினார். இந்த செயல்விளக்கத்தில் ஆராய்ச்சியாளர்கள் விஜயசங்கர், பாண்டிதுரை குன்றாண்டார்கோவில், குளத்தூர் தாலுகா பகுதியைச் சேர்ந்த விவசாயிகளும் கிராம மக்களும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். மலையடிபட்டி கிராமத்தில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ள பகுதிகளுக்கு விவசாயிகளை அழைத்துச் சென்று மக்காச்சோளம் மேக்சீம் தெளிக்கும் செயல்விளக்கமும் காண்பிக்கப்பட்டது.

## பரசலூரில் கோமாரி தடுப்பூசி முகாம்

செம்பனார்கோவில், : நாகை மாவட்டம் செம்பனார்கோவில் அடுத்த பரசலூரில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. ஊராட்சி மன்ற தலைவர் புஷ்பலதா பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். கால்நடை உதவி மருத்துவர் அன்பரசன் முன்னிலை வகித்தார். ஊராட்சி மன்ற துணைத்தலைவர் அனிதா மனோகரன் வரவேற்றார். சாத்தனூர், மேலக்கட்டளை, மகாராஜபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள 700க்கும் மேற்£ட்ட கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டது. கால்நடை உதவி மருத்துவர் முத்துகுமராசமி, கால்நடை ஆய்வாளர் உமாமகேஸ்வரி, பராமரிப்பு உதவியாளர்கள் மகேந்திரன், கோபி ஆகியோர் கலந்து கொண்டனர். நாகை தெற்கு பொய்கைநல்லூர் ஊராட்சியில் நடந்த கோமாரிநோய் தடுப்பூசி முகாமில் 800 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. நாகை மாவட்டத்தில் கடந்த 1ம் தேதி முதல் 21ம் தேதி வரை கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணி நடைபெற்று வருகிறது. நாகையை அடுத்த தெற்கு பொய்கைநல்லூர் ஊராட்சியில் கோமாரி தடுப்பூசி முகாம் நடைபெற்றது. முகாமில் கால்நடை மருத்துவர் குமரன் தலைமையில் ஆய்வாளர்கள் பாரிவேந்தன், லலிதா மற்றும் ரவி, பழனிச்சாமி கொண்ட மருத்துவ குழுவினர் அப்பகுதியில் உள்ள 800 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர்.

## வேளாண் ஆலோசனை குழு அமைப்பு

திருத்துறைப்பூண்டி : தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகத்தால் வேளாண்மையை மேம்படுத்தவும், உழவர்களின் கருத்துகளை கேட்டறிய ஆலோசனை குழு துணை வேந்தர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள திருத்துறைப்பூண்டி நெல் ஜெயராமன் கூறியது:துணைவேந்தர் உழவர்களுடைய கருத்துகளையும் கேட்டறிந்து காலபருவ சூழ்நிலைக்கேற்ப விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் அமைய ஆலோசனை

குழுவை அமைத்துள்ளார். இந்த குழு மூலம் வேளாண்மை துறைக்கும், வேளாண்மை பல்கலை கழகத்திற்கும், உழவர்கள் தங்கள் மேலான கருத்துகளையும், தகவல்களையும், ஆலோசனைகளையும் வழங்குவதன் மூலம் ஆராய்ச்சிகளை முன்னெடுத்து செல்லவும் வழி வகுக்கப்பட்டுள்ளது என்றார்.

## முதல்போக நெற்பயிரில் புகுந்து விளையாடும் புகையான் பூச்சிகள் அழிக்க அதிகாரிகள் ஆலோசனை

சின்னமனூர், : சின்னமனூர் பகுதிகளில் புகையான் பூச்சி தாக்குதலால் பாதிப்படைந்த முதல் போக நெற்பயிர்களை வேளாண்மை அதிகாரிகள் குழுவினர் ஆய்வு செய்தனர்.சின்னமனூர் மார்க்கயன்கோட்டை, குச்சனூர், துரைச்சாமிபுரம், சீலையம்பட்டி, வேம்படிகளம், கே.கே.குளம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 4 ஆயிரம் ஏக்கர் பரப்பில் முதல்போக நெல் சாகுபடி 1400 ஏக்கர் பரப்பில் செய்யப்பட்டுள்ளது. தற்போது 60 நாள் பயிராக வளர்ச்சி அடைந்துள்ளது. தற்போது வீசும் வாடை காற்று, மழையின்மை, புகையான் பூச்சி தாக்குதலால் பயிர்கள்பாதிக்கப்பட்டுள்ளன. இதுகுறித்து இப்பகுதி விவசாயிகள் சின்னமனூர் வேளாண்மை அலுவலகத்தில் புகார் தெரிவித்தனர். இதனைதொடர்ந்து உதவி வேளாண்மை இயக்குனர் சந்திரசேகரன் தலைமையில் வேளாண் அதிகாரிகள் சின்னமனூர், மார்க்கயன்கோட்டை, குச்சனூர் போன்ற பகுதிகளில் தாக்கப்பட்டுள்ள நெற்பயிர்களை பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர். உத்தமபாளையம்: உத்தமபாளையம் பகுதிகளில் பெரியாறு அணை பாசனத்தின் மூலம் ராயப்பன்பட்டி, கோகிலாபுரம், ஆனைமலையன்பட்டி, ராமசாமிநாயக்கன்பட்டி, உத்தமபாளையம், உ.அம்மாபட்டி, அம்பாசமுத்திரம் உள்ளிட்ட ஊர்களில் 900 ஹெக்டேரில் நெல் நாற்று நடப்பட்டு வளர்ந்து வருகிறது. சீதோஷ்ண மாற்றம், புகையான் பூச்சி தாக்குதலால் பயிர்கள் பாதிப்படைந்துள்ளன. இதனை ஆய்வு செய்வதற்காக பெரியகுளம் தோட்டக்கலை மற்றும்வேளாண்மை கல்லூரியின் பூச்சியியல்துறை விஞ்ஞானி சுரேஷ், விதைகரக்கட்டுப்பாட்டு அலுவலர் ஜெயபாண்டி, நாட்ராயன், அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து ஆகியோர் கொண்ட குழுவினர் நேரில் ஆய்வு செய்தனர். அதிகாரிகள் வழங்கிய ஆலோசனைகள்:

புகையான் பூச்சிகள் பழுப்பு நிறத்தில் சிறிய 60 முதல் 100 முட்டைகளை இடும். முட்டையிலிருந்து வெளிவரும் இளம் பூச்சிகள் பயிரின் தண்டுப்பகுதியில் சாற்றை

உறிஞ்சி வாழும். இதனால் பயிர்கள் மஞ்சள் அல்லது பழுப்பு நிறமாக மாறி காய்ந்து விடும். பின்னர் பயிர்கள் தாங்க முடியாமல் சாய்ந்து விடும். முதிர்ச்சி அடைந்த தத்துப்பூச்சி கரும்பழுப்பு நிறமுடையதாக இருக்கும். இவை தூரின் அடிப்பகுதியில் கூட்டமாக காணப்படும். இது ஒரு வயலில் இருந்து அடுத்த வயலுக்கு நீரைவடிப்பதன் மூலம் பரவும். இப்பூச்சியை கட்டுப்படுத்த தேவைக்கு அதிகமான தழைச்சத்து உரங்களை தவிர்க்க வேண்டும். விளக்குப்பொறி அமைத்து புகையானை கவர்ந்து இழுத்து அழிக்கலாம். பகல் நேரங்களில் மஞ்சள் நிற பொறிகளை வைத்து எண்ணிக்கையை குறைக்கலாம். வயலில் நன்றாக நீரை வடிக்க விட வேண்டும். வயலை 8 அடிக்கு 1 அடி வீதம் கலவன் பாதை அதாவது பட்டம் விட்டு ஒதுக்கி விட வேண்டும். ஒரு தூருக்கு இரண்டு பழுப்பு பூச்சிகள் இருக்கலாம். இதற்கு கூடுதலான எண்ணிக்கையில் பூச்சிகள் இருந்தால் பூச்சிக்கொல்லி மருந்தினை தெளிக்க வேண்டும். ஒரு ஹெக்டேருக்கு பாஸ்போமிடான் 1000 மில்லி (அல்லது) பாஸ்லோன் 1500 மில்லி (அல்லது) புரோபினோபாஸ் 1000 மில்லி தெளிக்க வேண்டும். புகையான் பூச்சி தாக்குதல் உள்ள வயலில் சின்தடிக் பைதாராய்டு மிதைல் பாரத்தியான் பென்தியான், குயினல்பாஸ் போன்ற பூச்சி மருந்துகளை தெளிக்கக்கூடாது. வேம்பு எண்ணெய் 3 சதம் ஒரு ஹெக்டேருக்கு 15 லிட்டர் அல்லது வேம்பு கொட்டைசாறு 5 சதவீதம் கரைசல் (25 கிலோ) தெளித்து கட்டுப்படுத்தலாம்.இவ்வாறு கூறியுள்ளனர்.

**<u>செட்டிக்குளம் வணிக வளாகத்தில் 14 டன் வெங்காயம் ரூ 2 லட்சத்திற்கு ஏலம்</u>**

பெரம்பலூர், : செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 14 டன் சின்ன வெங்காயம் ரூ. 2 லட்சத்திற்கு ஏலம் மூலம் விற்பனை ஆனது.பெரம்பலூர் கலெக்டர் தரேஸ் அகமது வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: பெரம்பலூர் மாவட்டம் செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் நேற்று முன்தினம் 9ந்தேதி திறந்த முறை ஏலம் நடைபெற்றது. இதில் அன்னமங்கலம், எசனை, பெரம்பலூர், எளம்பலூர், இரூர், ஆலத்தூர், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், களரம்பட்டி, பாடா லூர், கூத்தூர் நமையூர், சிறுவயலூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 42 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை திறந்த முறை ஏலத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்தனர். செட்டிக்குளம், சின்னசேலம், கோபிச்செட்டிப்பாளையம், நாட்டார்மங்களம்,

திண்டுக்கல், மற்றும் பாடாலூர் ஆகிய பகுதிகளிலிருந்து வியாபாரிகள் மற்றும் திண்டுக்கல்லில் இருந்து விதை வெங்காயம் வாங்கும் விவசாயிகள் என 15 நபர்கள் ஏலத்தில் கலந்து கொண்டனர். விவசாயிகள் கொண்டு வந்திருந்த 242 மூட்டை (13 ஆயிரத்து 791 கிலோ) சின்ன வெங்காயத்தை வியாபாரிகள் மற் றும் விதை வெங் காய விவசாயிகள் ஏலத்தில் எடுத்தனர். ஏலத்தில் பழைய பட்டறை வெங்காயம் கிலோவுக்கு அதிக பட்சம் ரூ.11.50 க்கும், புதிய வெங்காயம் கிலோ ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.27.50 க்கும், சராசரியாக கிலோ ஒன்றுக்கு ரூ.15.50ம் விலை கிடைத்தது. இதன் மூலம் ரூ.2 லட்சத்து 14 ஆயிரத்து 938 ரூபாய்க்கு விற்பனை நடைபெற்றது.மேலும் இவ்வணிக வளாகத்தில் செவ்வாய் மற்றும் வியாழக் கிழமைகளில் திறந்த முறை ஏலம் நடத்தப்படுகிறது. விவசாயிகள் தங்களது வெங்காய விளை பொருளை வியாழக்கிழமை (11ம் தேதி) அன்று கொண்டு வந்து விற்பனை செய்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது என அதில் தெரிவித்துள்ளார்.

**<u>சிறு தானிய உணவின் பயன்பாட்டை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் கலெக்டர் அறிவுறுத்தல்</u>**

பெரம்பலூர்,: சிறு தானிய உணவின் பயன்பாட்டை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என பெரம்பலூரில் உணவுத்திருவிழாவை துவக்கி வைத்து கலெக்டர் தரேஸ் அகமது பேசினார். பெரம்பலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டத்துறையின் சார்பில் பாரம்பரிய உணவுத்திருவிழா பெரம்பலூர் ஜே.கே மகாலில் நடைபெற் றது. நிகழ்ச்சிக்கு கலெக்டர் தரேஸ்அகமது, தலைமை வகித்து எம்பி மருதராஜா முன்னிலையில் குத்து விள க்கேற்றி உணவுத்திருவிழா வை துவக்கி வைத்தார்.தொடர்ந்து விழாவில் கலெக்டர் பேசுகையில், நமது நாட்டில் பண்டையக்காலம் முதலே சிறுதானியங்கள் உணவாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. பாரம்பரிய சிறு தானியங்களான வரகு, சாமை, தினை, கம்பு, சோளம், கேழ்வரகு, குதிரைவாலி போன்ற உணவுப் பொருட்களைப் பயன்படுத்துவதால் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள் சரியான அளவில் கிடைக்கிறது. தற்போது மாறிவரும் நாகரிக வளர்ச்சியால் நகர்ப்புற மக்களிடையே

சிறுதானியங்களின் பயன்பாடு குறைந்து வருகிறது, தற்போது கிராமப்புற மக்களும் தங்கள் அன்றாட உணவில் சிறுதானியங்களை மிகவும் குறைவாகவே பயன்படுத்தி வருகின்றனர். சிறுதானியங்கள் பயிரிடப்படும் பரப்பளவும், விளைச்சலும் மிக குறைந்து வருகிறது. சிறுதானியங்களில் ஊட்டச்சத்துக்களின் அளவு அதிகமாக உள்ளதால் அத ன் முக்கியத்துவம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. எனவே, சிறுதானிய உணவின் பயன்பாடு மற்றும் முக்கியத்துவத்தை மக்களிடம் கொண்டு சென்று அவற்றை பயன்படுத்துவதற்காகத்தான் பாரம்பரிய உணவுத்திருவிழா நடத்தப்படுகிறது. இந்த உணவுத்திருவிழாவில் அறிஞர்கள் உணவு கலாச்சாரம், இயற்கை விவசாயம், வீட்டுத்தோட்டம், மரபுசார் வேளாண்மை, சுற்றுச்சூழல் குறித்து தினந்தோறும் உரை ஆற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாரம்பரிய உணவுப்பொருட்கள் தயாரிப்பது குறித்து விளக்கம் அளிக் கவும், பாரம்பரிய உணவுப் பொருட்களில் செய்யப்பட்ட தின்பண்டங்கள் கா ட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உணவுத்திருவிழாவில் பொதுமக்கள் கலந்து கொள்வதுடன், சிறுதானியங்களை கொண்டு உணவுப்பொருட்களை தங்கள் வீடுகளில் செய்து சாப்பிடுவதன் மூலம் திடமான, ஆரோக்கியமான நல்வாழ்க்கை வாழலாம் என்றார். தொடர்ந்து டாக்டர்.சிவராமன் பாரம்பரிய உணவுப்பொருட்கள் குறித்து பேசினார். பாரம்பரிய உணவுப்பொருள் கண்காட்சியில் விவசாயத்துறை, தோட்டக்கலைத்துறை, புதுவாழ்வு, மகளிர்திட்டம் ஆகிய துறைகளின் கண்காட்சியும், பாரம்பரிய மண்பாண்டங்களில் செய்யப்பட்ட பொருட்கள், பனை பொருட்கள், மூலிகைத் தாவரம், உணவு முறைகள் குறித்த புத்தகக்கண்காட்சி மரசிற்பம் ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் வரகு, சாமை, தினை, கம்பு, சோளம், கேழ்வரகு, குதிரைவாலி, அவல் மற்றும் நவதானியங்களால் செய்யப்பட்ட இனிப்பு உருண்டை, பனியாரம், தோசை, முறுக்கு, அடை, பொங்கல், குதிரைவாலி தயிர் சாதம், பொரிவிளங்கா உருண்டை, பிரியாணி, போன்ற உணவு வகைகளும், துளசி டீ, வாழைத்தண்டு சூப், வா ழைத்தண்டு ஜூஸ்

தூதுளை சூப், அருகம்புல் ஜூஸ், ஆவாரம்பூ முடக்கத்தான் சூப், கொள்ளு ரசம், முருங்கைகீரை சூப், முள்ளங்கிகீரை சூப், பானகம், உளுந்தங்கஞ்சி, சுக்கு காபி ஆகியவையும் தலா ரூ.5க்கு வழங்கப்பட்டன. விழாவில் நகராட்சித்தலைவர் ரமேஷ், ஒன்றியக்குழுத்தலைவர்கள் பெரம்பலூர்-ஜெயக்குமார், வேப்பூர் கிருஷ்ணக்குமார், ஆலத்தூர்-வெண்ணிலாராஜா, மாவட்ட ஊராட்சிக் குழுத்துணை தலைவர் சேகர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர்புவனேஸ்வாரி, புது வாழ்வு திட்ட அலுவலர் சுதாதேவி, உள்பட அரசு அலுவலர் கள் கலந்து கொண்டனர்.

**ஜெயங்கொண்டம் அருகே 550 கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி**

ஜெயங்கொண்டம், :ஜெயங்கொண்டம் அருகில் உள்ள பாப்பாகுடி ஊராட்சியில் நேற்று ஊராட்சி மன்ற தலைவர் சக்திவேல் முன்னிலையில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. முகாமில், கால்நடை மருத்துவர் ஆனந்தி தலைமையில் மருத்துவர்கள் சுதாகரன், சத்தியமூர்த்தி ஆகியோர் கொண்ட மருத்துவ குழுவினர் 550 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டு சிகிச்சை அளித்தனர். முகாமில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கால்நடை ஆய்வாளர்கள், மற்றும் பராமரிப்பாளர்கள் கலந்துகொண்டனர். முன்னதாக, ஊராட்சி மன்ற துணைத்தலைவர் ஞானசேகரன் வரவேற்றார். இறுதியில், பராமரிப்பு அலுவலர் ராதா கிருஷ்ணன் நன்றி கூறினார்.

**பெரம்பலூரில் 14 மாவட்ட விவசாயிகளுடன் வெப்சா நிறுவனம் துவக்கம்**

பெரம்பலூர், : பெரம்பலூரில் 14 மாவட்ட விவசாயிகள் இணைந்த வெப்சா நிறுவனம் துவக்கப்பட்டுள்ளது. பெரம்பலூரை தலைமையிடமாக கொண்டு 14 மாவட்ட விவசாயிகள் இணைந்து துவங்கியுள்ள வெப்சா விவசாய உற்பத்தியாளர் நிறுவனத்தின் துவக்க விழா பெரம்பலூர் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. முன்னதாக சப்.கலெக்டர் மதுசூதன் ரெட்டி, பெரம்பலூர் நகரின் சஞ்சீவிராயன் கோவில் தெருவில் அமைந்துள்ள வெப்சா விவசாய உற்பத்தியாளர்

நிறுவனத்தை திறந்து வைத்து பேசினார். நிகழ்ச்சியில் கோவை வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் ராமசாமி பேசுகையில், விவசாயிகளுக்கு தேவையான விதைகளை உற்பத்தி செய்து வழங்கவும், விதை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவும் வேளாண் பல்கலைக்கழகம் தயாராக உள்ளது என்றார். தமிழ்நாட்டில் உள்ள 14 மாவட்டங்களைச் சேர்ந்த 100 விவசாயிகள் ஒன்று சேர்ந்து ஒவ்வொருவரும் தலா ரூ. 10,000 முதலீடு செய்து பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு விவசாய உற்பத்தியாளர் கம்பெனி ஆரம்பித்துள்ளனார். இதற்கு வெப்சா விவசாயிகள் உற்பத்தியாளர் கம்பெனி என்று பெயர் சூட்டியுள்ளனர். இந்த வெப்சா கம்பெனியின் முக்கிய நோக்கம் நாட்டின் முதுகெலும்பாக கருதப்படும் விவசாயத்தையும், அதை முறையாக செய்ய முடியாமல் பல்வேறு இன்னல்களைச் சந்தித்து விவசாயமே வேண்டாம் என்று விவசாயத்தை வெறுக்கும் விவசாயிகளையும் இந்த மோசமான நிலையிலிருந்து மீட்டு எடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும். இதற்காக வெப்சா நிறுவனம் பெரம்பலூர், விருதாச்சலம், லால்குடி, குளித்தலை மற்றும் காங்கேயம் ஆகிய ஐந்து இடங்களில் விவசாய இடுபொருள் விற்பனை நிலையமும், விவசாய விளைபொருள் விற்பனை நிலையமும் உடனடியாக துவங்க உள்ளனர். விருதாச்சலம் மற்றும் மயிலாடுதுறை பகுதியில் நெல் மற்றும் பயறு வகைகள் விதை உற்பத்தி மையம் மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையம் ஆரம்பிக்க உள்ளனர். திருச்சி மாவட்டத்தில் மூவானூர் பகுதியில் தோட்டக்கலை நாற்று உற்பத்தி மையம் தொடங்கப்பட உள்ளது. பெரம்பலூர் மாவட்டம் மலையாளப் பட்டி, திருப்பூர் மாவட்டம் காங்கேயம் பகுதியில் இயற்கை வேளாண் இடுபொருட்கள் உற்பத்தி மை யம் துவங்கப்பட உள்ளது. வெளிநாடு வாழ் இந்தியர்கள் உதவியுடன் அரிசி, பயறு வகைகள் மற்றும் சிறுதானியங்கள் ஏற்றுமதி செய்யப்பட உள்ளது. விழாவில் வேளாண் இணை இயக்குநர் அழகிரிசாமி, வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலைய தலைவர் கவிமணி, நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் சோழன், வெப்சா நிறுவனத் தலைவர் திருநாவுக்கரசர், செயல் இயக்குநர் மகேந்திர மணிவாசன் உள்பட அரசு அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**தேனீ வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி**

திருபுவனை: புதுச்சேரி அரசு வேளாண் துறை தோட்டக்கலை பிரிவின் கீழ் இயங்கும் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் விவசாய தேனீ வளர்ப்பு மற்றும் சந்தைபடுத்துதல் குறித்த 2 நாள் பயிற்சி முகாம் மதகடிப்பட்டில் உள்ள அரசு பழத்தோட்டத்தில் நடந்தது. துணை வேளாண் இயக்குநர் சிவபெருமான் அனைவரையும் வரவேற்று, தேனீக்களின் முக்கியத்துவம் குறித்து பேசினார். கூடுதல் வேளாண் இயக்குநர் ஜெய்சங்கர் தோட்டக்கலை தேனீ வளர்ப்பு என்ற புத்தகத்தை வெளி யிட்டு பயிற்சி முகாமை துவக்கி வைத்தார். ஜோசப் ஆல்பர்ட் தேனீக்களின் வாழ்க்கை சுழற்சி முறை பற்றியும், தேனீ வளர்ப்பு நிபுணர் நடேசன் தேனீ வளர்ப்பு முறை பற்றியும், அதன் செயல் விளக்கம் குறித்தும் பயிற்சி அளித்தனர். புதுச்சேரி வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல் துறை நிபுணர் விஜயகுமார் தேனீக்களுக்கு ஏற்படும் நோய்கள் மற்றும் பூச்சிகளின் மேலாண்மை பற்றியும், வேளாண் இணை இயக்குநர் ராகவன் தேனீக்களின் பண்புகள் குறித்தும் விளக்கமளித்தனர். வேளாண் அலுவலர் சங்கரதாஸ் நன்றி கூறினார். 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சுல்தான்பேட்டை பகுதியில் பாகற்காய் விலை அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி**



பாகற்காய் விலை அதிகரித்து வருவதால் சுல்தான்பேட்டை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பாகற்காய் சாகுபடி சுல்தான்பேட்டை வட் டாரத்தில் கொடிப் பயிரான பாகற்காய், பீர்க்கன்காய், புடலங்காய் ஆகியவை அதிகளவில் சாகுபடி செய்யப் பட்டு வருகிறது. இதில் தற் போது பாகற்காய் அறுவடை தீவிர மடைந்துள்ளது. ஒரு ஏக்கர் பாகற்காய் சாகுபடிக்கு விதை, இடுபொருட்கள் என ரூ.50 ஆயிரம் முதல் ரூ.60 ஆயிரம் வரை விவசாயிகளுக்கு செலவு ஆகிறது. அறுவடை தொடங்கியதில் இருந்து 2 மாதங்கள் வரை பலன் தருகிறது. 8 நாட்களுக்கு ஒரு முறை ஏக்கருக்கு 600 முதல் 700 கிலோ வரை பாகற்காய் கிடைக்கிறது. தற்போது அறுவடை தீவிர மடைந்து வரும் நிலையில் ஒரு கிலோ பாகற்காய்க்கு குறைந்த பட்சம் ரூ.25–ம் அதிகபட்சம் ரூ.30 கொள்முதல் விலையாக விவசாயிகளுக்கு கிடைத்து வருகிறது. மேலும் விலை அதிகரிப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கிராக்கி குறையவில்லை பாகற்காய் சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் ஆற்றல், குடல்புழுக்களை அழித்தல் உள்பட பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ள தால் வாரம் ஒருமுறையாவது பாகற்காயை உணவில் சேர்க்க மருத்துவர்கள் அறிவுறுத்தி வருகின்றனர். இதன் காரணமாக கசப்பு தன்மை கொண்ட பாகற்காய் பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கி சாப்பிடுகின்றனர். இத னால் பாகற்காய்க்கு கிராக்கி குறையாமல் உள்ளது. திருப் பூர், பல்லடம், கோவை மற்றும் கேரள மார்க்கெட் பகுதியில் பாகற்காய்க்கு தொடர்ந்து கட்டு படியான நல்ல விலை கிடைத்து வருவதால் கசப் பான பாகற்காயின் விலை சுல்தான்பேட்டை வட்டார பாகற்காய் சாகுபடி விவசாயி களுக்கு இனிப்பை தந்துள்ளது. மேலும் பாகற்காயில் சிப்ஸ் தயாரிக்க கேரள வியாபாரிகள் மிக அதிக அளவில் பாகற்காய் கொள்முதல் செய்வது விவசாயிகளுக்கு உற்சாகத்தை அளித்துள்ளது. இது குறித்து விவசாயிகள் கூறும் போது, கடந்த ஆண்டை விட

தற்போது சுல்தான் பேட்டை பகுதியில் பாகற்காய் விளைச்சல் அதிகமாக உள்ளது. விலையும் நன்றாக உள்ளதால் மகிழ்ச்சி அடைந்துள்ளோம் என்று கூறினார்கள்.

**கோயம்பேடு மார்க்கெட்டில் பல்லாரி, தக்காளி விலை சரிவு பீன்ஸ் ரூ.30–க்கும், அவரைக்காய் ரூ.40–க்கும் விற்பனை**



சென்னை, சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் பல்லாரி, தக்காளி விலை சரிந்துள்ளது. மேலும் மற்ற காய்கறிகளின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது. பீன்ஸ் ரூ.30–க்கும், அவரைக்காய் ரூ.40–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

பல்லாரி, தக்காளி விலை குறைவு

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த வாரத்தை காட்டிலும் பல்லாரி, தக்காளி ஆகியவற்றின் விலை குறைந்துள்ளது. கடந்த வாரத்தில் ஒரு கிலோ ரூ.40–க்கு விற்பனை செய்யப்பட்ட பல்லாரி, நேற்று ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது. தக்காளி கடந்த வாரத்தில் ஒரு கிலோ ரூ.30 முதல் ரூ.35 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் நேற்று ஒரு கிலோ தக்காளி ரூ.15 முதல் ரூ.20 வரை விற்பனையானது. கடந்த வாரத்தில் பீன்ஸ் ஒரு கிலோ ரூ.50–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. ஆனால் நேற்று ஒரு கிலோ ரூ.30–க்கும், கடந்த வாரத்தில் ஒரு கிலோ ரூ.50–க்கு விற்பனையான அவரைக்காய், நேற்று ஒரு கிலோ ரூ.40–க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதுகுறித்து சென்னை கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்திரராஜன் கூறியதாவது:–

வரத்து அதிகரிப்பு

கடந்த சில வாரங்களாகவே காய்கறிகளின் விலையில் தொடர்ந்து மாற்றம் இருந்து கொண்டே இருக்கிறது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு விலை உச்சத்தில்

காணப்பட்டு வந்த தக்காளி, தற்போது விலை குறைந்து காணப்பட்டுள்ளது.ஒரு நாளைக்கு 40 லாரிகளில் வந்துகொண்டிருந்த தக்காளி, ஆந்திரா, கர்நாடகா ஆகிய பகுதிகளில் விளைச்சல் அதிகரித்துள்ளதால் இப்போது நாளொன்றுக்கு 60 லாரிகளில் வந்து கொண்டு இருக்கிறது. பல்லாரி ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் இருந்து தற்போது வரத்து அதிகரித்துள்ளது. இதனால் கடந்த வாரத்தில் விலை உயர்ந்து காணப்பட்ட பல்லாரி தற்போது குறைந்துள்ளது. இதே போல், மற்ற காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளதால், காய்கறிகளின் விலை வீழ்ச்சி அடைந்து காணப்படுகிறது. ஆனால் உருளைக்கிழங்கு வரத்து குறைந்துள்ளதால், அதன் விலை மட்டும் சற்று உயர்ந்துள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>விலை நிலவரம்</u>

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:– பீன்ஸ் – ரூ.30, கேரட் – ரூ.40, நூக்கல் – ரூ.20, சவ்சவ் – ரூ.20, பீட்ரூட் – ரூ.20, முட்டைக்கோஸ் – ரூ.10, பல்லாரி – ரூ.20 முதல் ரூ.25 வரை, சாம்பார் வெங்காயம் – ரூ.35, அவரைக்காய் – ரூ.40, வெண்டைக்காய் – ரூ.20, கோவக்காய் – ரூ.20, கொத்தவரங்காய் – ரூ.18, பாகற்காய் – ரூ.25, முருங்கைக்காய் – ரூ.35, முள்ளங்கி – ரூ.15, சுரைக்காய் – ரூ.20, புடலங்காய் – ரூ.20, கத்தரிக்காய் – ரூ.15 முதல் ரூ.20 வரை, உருளைக்கிழங்கு – ரூ.20, பச்சை பட்டாணி – ரூ.150, மிளகாய் – ரூ.25, சேனைக்கிழங்கு – ரூ.15, சேப்பக்கிழங்கு – ரூ.30, இஞ்சி (பழையது) – ரூ.110, இஞ்சி (புதியது) – ரூ.40.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பரவலாகி வரும் செங்காந்தள் மலர் சாகுபடி</u>**



தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் மூலிகைப் பயிர்களில் செங்காந்தள் மலர் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இதன் விதைகளும், கிழங்கும் ஏராளமான மருத்துவ குணங்களைக் கொண்டுள்ளதால் பல வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டின் அரசு மலர் என்ற பெருமையைப் பெற்றுள்ள இந்த மூலிகைப் பயிர் திருப்பூர் மாவட்டத்தில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மேலும் கரூர், திண்டுக்கல், சேலம், பெரம்பலூர், திருச்சி, நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்களிலும் இந்த செங்காந்தள் சாகுபடி பரவலாகி வருகிறது. செங்காந்தள் சாகுபடி குறித்து திருப்பூர் மாவட்டம், மூலனூர் வட்டார வேளாண் பொறியாளர் தி. யுவராஜ் கூறியதாவது: கண்வலிக் கிழங்கு என்றும், கலப்பைக் கிழங்கு என்றும் அழைக்கப்படும் செங்காந்தள், பொதுவாக அதிக தண்ணீர் தேவையில்லாத நிலத்தில் சாகுபடி செய்யப்படும் தோட்டப் பயிராகும். ஓரளவு மழை பெய்யக் கூடிய பகுதிகளில், வடிகால் வசதியுள்ள செம்மண், மணல் கலந்த செம்மண், ஒட்டக்கல் அல்லது வெங்கக்கல் கலந்த செம்மண் ஆகிய நிலங்கள் செங்காந்தள் சாகுபடிக்கு ஏற்ற இடமாகும். நிலக்கடலை, மஞ்சள், மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யும் நிலங்களில் செங்காந்தள் சாகுபடி செய்ய முடியும். விதைக் கிழங்குகளை ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நடவு செய்யலாம். அடுத்த 160 முதல் 180 நாட்களில் காய்களை அறுவடை செய்யலாம். காய்களை 10 முதல் 15 நாட்கள் வரை நிழலில் உலர்த்தி, காய்களில் உள்ள விதைகளைப் பிரித்து எடுக்க வேண்டும். ஏக்கருக்கு சுமார் 100 கிலோ விதை மகசூலாகக் கிடைக்கும். மேலும் அதே அளவுக்கு கிழங்குகளும் கிடைக்கும். தற்போது ஒரு கிலோ விதை ரூ.800 வரை விற்பனை ஆகிறது. செங்காந்தள் மலர் சாகுபடிக்கு சொட்டு நீர் பாசன முறை சிறந்தது ஆகும். சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்திலும், பெரு விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்திலும் சொட்டு நீர் பாசன அமைப்பை ஏற்படுத்திட விவசாயிகளுக்கு அரசு உதவிகளை

அளித்து வருகிறது. முதல் ஆண்டில் லாபம் குறைவாக இருந்த போதிலும், அடுத்தடுத்த ஆண்டுகளில் விவசாயிகளுக்கு அதிக லாபம் தருவதாக செங்காந்தள் சாகுபடி உள்ளது என்கிறார் யுவராஜ். மேலும் விவரங்களை அறிய 96591 08780 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம். **அரசு ஊக்கப்படுத்த வேண்டும்** செங்காந்தள் மலர் சாகுபடி மூலம் உற்பத்தி ஆகும் விதை சந்தை நிலவரத்துக்கு ஏற்ப அவ்வப்போது கிலோ ரூ.700 முதல் ரூ.1,700 வரை ஏற்ற, இறக்கத்துடன் விற்பனை ஆகிறது. இத்தகைய ஏற்ற, இறக்கத்துக்கு இடைத்தரகர்கள்தான் காரணம் எனக் கூறப்படுகிறது. ஆகவே, தமிழ்நாட்டின் அரசு மலர் சாகுபடியை மேலும் விரிவுபடுத்தும் வகையிலும், விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையிலும் விவசாயிகளின் லாபத்தைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## குலை குலையாய் பணம் தரும் வாழை: புதிய உத்தியால் லாபம் ஈட்டும் திருச்சி விவசாயி



திருச்சி அருகே அடர் நடவில் புதிய உத்தியைக் கையாண்டு ஒரு ஏக்கர் 30 சென்ட் நிலத்தில் 2,676 வாழைக் கன்றுகளை சாகுபடி செய்து பிற விவசாயிகளுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து வருகிறார் 33 வயதே ஆன இளம் விவசாயி ஆர். கிருஷ்ணகுமார். திருச்சி அருகிலுள்ள மேலக் கல்கண்டார் கோட்டை பகுதியைச் சேர்ந்தவர் இவர். ஆலத்தூரில் இவருக்கு நிலம் உள்ளது. பரம்பரை விவசாயியான இவர், குறைந்த இடத்தில், குறைந்த செலவில் அதிக மகசூல் பெற வேண்டும் என்பதற்காக அடர் நடவு முறையைப் பின்பற்றி அதில் வெற்றியும் கண்டுள்ளார். கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு கற்பூரவள்ளி ரகத்தை பயிரிட்ட இவர், தற்போது ஏலரசி என்ற வாழை ரகத்தை பயிரிட்டுள்ளார். இந்த வகை வாழைப் பழத்துக்கு பெங்களூர், மும்பை, சென்னை ஆகிய இடங்களில் நல்ல விற்பனை வாய்ப்பு உள்ளது என்கிறார். அடர் வாழை சாகுபடி பற்றி அவர் கூறியதாவது:

“அடர் நடவில் ஜோடி வரிசை என்ற முறையில் ஒரு குத்தில் ஒன்றரை அடி இடைவெளியில் 2 கன்றுகள் வீதம் ஒவ்வொரு குத்துக்கும் நீளவாக்கில் 5 அடியும், பக்கவாட்டில் 7 அடியும் இடைவெளி விட்டு நடவு செய்துள்ளேன். முதலில் நல்ல கன்றுகளை தேர்வு செய்து நட வேண்டும். நடவு செய்து 90 நாள்களில் தாய் கன்று மற்றும் பக்கவாட்டு கன்றுகள் அனைத்தும் ஒரே உயரத்தில் இருக்குமாறு வைத்து நறுக்கி விட வேண்டும். வழக்கமாக தாய் மரத்துடன் ஒரு கன்றைத்தான் விடுவார்கள். நான் 3 முதல் 4 கன்றுகள் வரை விட்டுள்ளேன். அனைத்து மரங்களும் தார் ஈனும். இந்த வகையில் ஒரு ஏக்கர் 30 சென்ட் நிலத்தில் ஜோடி வரிசை முறையில் 2,000 கன்றுகளும், பக்கவாட்டில் விட்ட கன்றுகள் 676 என மொத்தம் தற்போது 2,676 கன்றுகள் உள்ளன. (தோட்டக்கலைத்துறை பரிந்துரைப்பது ஏக்கருக்கு 1,000 கன்றுகள் தான்) மண்ணை வளப்படுத்தி விட்டால், அதில் எதை வேண்டுமானாலும் பயிரிட்டு, நல்ல மகசூல் எடுக்க முடியும். ஒவ்வொரு ஆண்டும் இயற்கை உரம் (மாட்டு சாணம்) மற்றும் பாஸ்போ பாக்டீரியா போன்ற நுண்ணுயிர் உரம் ஆகியவற்றை வயலில் இட்டு அதன் பின்னர்தான் கன்றுகளை நடவு செய்வேன். கன்றுகள் அதிகமாக இருப்பதால் மரம் மற்றும் காய்கள் வளர்ச்சி இருக்காது என்பதில்லை. மேலும், அடர் நடவில் மரங்கள் நெருக்கமாக இருப்பதால் காற்று அதிகமாக வீசினாலும் மரங்களுக்கு பெரிய அளவுக்கு பாதிப்பு ஏற்படாது. இருந்தாலும், தேவையான இடங்களில் சவுக்கு கம்புகள் மூலம் முட்டுகள் கொடுப்போம். தாய் கன்றுகளை நோய் தாக்கினாலும் கூட, பக்கவாட்டு கன்றுகளை தாக்காது. வாழைக் கன்றுகளை நடவு செய்தவுடன் ஊடுபயிராக உளுந்து, புடலை, பீர்க்கை உள்ளிட்டவைகளையும் பயிரிடு வேன். வாழை மரம் வளர்வதற்குள் இந்த பயிர்களிலிருந்து நமக்கு வருமானம் கிடைக்கும்.

மேலும், வறட்சியால் மரங்களுக்கு தண்ணீர் இல்லாத நிலை ஏற்படக் கூடாது என்பதற்காக சொட்டு நீர் பாசனம் அமைத்துள்ளேன். மேலும், தோகைமலையில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகளின் ஆலோசனைபடி உர நிர்வாகத்தை பின்பற்றி வருகிறேன். மேலும், மரத்தில் உள்ள காய்ந்த மட்டைகளை வெட்டி வயலிலேயே போட்டு விடுவேன். இதனால் களைகள் அதிக அளவில் முளைக்காது. மட்டைகள் மக்கி வயலுக்கு உரமாகி விடும் என்கிறார் கிருஷ் ணகுமார். ஒரு ஏக்கர் 30 சென்ட் நிலத்தில் வாழை சாகுபடியை மேற்கொள்ள ஓராண்டுக்கு ஏறத்தாழ ரூ 1.75 லட்சம் செலவாகிறது. அடர் நடவில் புதிய உத்தி

மூலம் முறையாக சாகுபடியை மேற்கொண்டால் ரூ.7 லட்சம் வரையில் லாபம் கிடைக்கும். ஏலரசி வாழை குறைந்தபட்சம் கிலோ ரூ.30 முதல் அதிகபட்சமாக ரூ.54 வரையில் விற்பனை செய்துள்ளேன். நான் பயிரிட்டுள்ள 2,676 மரங்களில் 2,300 தார்களாவது நிச்சயம் கிடைக்கும். கடின உழைப்பும், தொழிலில் ஈடுபாடும் இருந்தால், மண்ணை யும் பொன்னாக்கலாம் என்பது தான் விவசாயி கிருஷ்ண குமாரின் தாரக மந்திரம். இவரது உழைப்பு, உத்தியைக் கவுரவிக்கும் வகை யில் தேசிய ஆராய்ச்சி மையம் சிறந்த வாழை விவசாயி விருதை வழங்கியுள்ளது. மேலும் விவரங்களுக்கு 96777 09902 என்ற எண்ணில் அவரை தொடர்பு கொள்ளலாம்.